**OS.NO: 19/2024**

**PW :1** (மகேஷ் த/பெ.ராஜேந்திரன் )

நாள் : 19.08.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் பெட்ரோல் பங்க் வைத்து நடத்தி வருகிறேன். என்னுடைய ஆண்டு வருமானம் 25 முதல் 30 இலட்சம் ஆகும். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். பிரதிவாதி ஒரே ஊர்காரர் அவரை எனக்கு 20 ஆண்டுகளாக தெரியும். தற்போது பிரதிவாதி சென்னையில் வசித்து வருகிறார். பிரதிவாதி வெங்காயம் மொத்த வியாபாரம் செய்து வருகிறார். வாசாஆ.12 ல் நான் எந்த இடத்திலாவது பிரதிவாதியின் மகள் படிப்பு செலவிற்கு கடனாக பணம் கொடுத்ததாக கூறியுள்ளேனா என்றால் இல்லை ஆனால் பிராதில் கூறியுள்ளேன். ரூ.60 இலட்சத்தை 4 தவணைகளாக எந்தேந்த தேதிகளிள் கொடுத்தேன் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை ஆனால் ஜீலை 2021 ல் ரூ.15 இலட்சமும் ஆகஸ்ட் 2021 ல் 2ம் வாரத்தில் ஒரு ரூ.15 இலட்சமும் மூன்றாம் வாரத்தில் ரூ.15 இலட்சமும், செம்டம்பர் மாதத்தில் ரூ.15 இலட்சமும் பிரதிவாதியிடம் செலுத்தினேன். தாவா சொத்தை கிரையம் பெற வேண்டி தான் மேற்படி பணத்தை பிரதிவாதியிடம் செலுத்தினேன் என்றால் சரிதான். ஜீலை 2021 ல் முதல் தவணை செலுத்திய போதே விக்கிரய ஒப்பந்தம் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரிதான் பிரதிவாதி ரூ.60 இலட்சம் செலுத்திய பிறகு கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொள்ளலாம் என்று கூறினார். இந்த விவரத்தை என்னுடைய பிதாதில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. வருமான வரி சட்டத்தின் படி ரூ.20 ஆயிரத்திற்கு மேல் நடைபெறும் எந்த பரிவர்த்தனையும் காசோலை மூலமாகவோ அல்லது வங்கி பரிமாற்றத்தின் மூலமாகவோ தான் செய்யவேண்டும் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2021-ம் ஆண்டிற்காக வருமான வரி கணக்கில் மேற்படி ரூ.1 கோடியை காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். அது சம்பந்தமான

ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 7–ல் பிரதிவாதி தான் கிரைய ஒப்பந்தத்தை என் வீட்டில் வந்து கொடுத்ததாக கூறியுள்ளேன் அந்த விவரத்தை என்னடைய பிராதிலோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்பிலோ கூறியுள்ளேனா என்றால் பிரதிவாதிதான் கிரைய ஒப்பந்தத்தை தயாரித்து என் வீட்டில் கொடுத்தார் ஆனால் அந்த விவரத்தை என்னுடைய பிராதில் கூறவில்லை. வாசாஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள விவரங்களில் அதன் எழுத்து அளவுகோள் மாறியுள்ளதா என்றால் ஆமாம். வாசாஆ.1–ல் 3 வது பக்கத்தில் எழுதி கொடுத்தவர் எழுதி வாங்குபவர் என்று மற்ற 2 பக்கங்களில் உள்ளது போல் உள்ளதா என்றால் இல்லை. வாசாஆ. 1 ஆவணம் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆணவம் என்றும் அது போல் பிரிதிவாதி எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் தவறு பிரதிவாதிதான் தாவா சொத்தினுடைய அனைத்து அசல் ஆவணத்தை என்னிடம் ஒப்படைத்திருந்தார். அசல் வழக்கு எண். 24/2024 ல் ரூ.40 இலட்சத்திற்கு இந்த வழக்கின் பிரதிவாதி எனகது பெயருக்கு ஒரு கிரைய ஒப்பநதம் எழுதி கொடுத்ததாக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றும் அந்த வழக்கில் கண்ட சொத்து சுந்தரம் BNP பரிபாஷ் என்ற வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த அடமானத்திற்காக நான் தான் ரூ.19,09,151/– ஐ வங்கியில் செலுத்தி மீட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான் நான் தான் எனது வங்கி கணக்கில் இருந்து மேற்படி வங்கிக்கு 06.09.2021 அன்று பணம் பரிமாற்றம் செய்திருந்தேன். அதன் அசல் ஆவணங்களை பிரதிவாதிதான் வங்கியில் இருந்து வாங்கி வந்து என் வசம் ஒப்படைத்தார். மேற்படி பணபரிமாற்றத்திற்கு 4 நாட்களுக்கு முன்பு தான் தாவா கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி ரூ.19 இலட்சம் நான் செலுத்தியதற்கு Security யாக பிரதிவாதி அவருடைய அசல் ஆவணங்களை என் வசம் ஒப்படைத்திருந்தார் என்றும் அந்த பணத்தை செலத்திவிட்டு ஆவணங்களை பெற்று செல்வதாக கூறியிருந்தார் என்றும் ஆனால் நான் தான்

அவைகளை துஷ்பிரோயகம் செய்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அப்படியிருந்திருந்தால் சுந்தரம் பைனான்ஸில் அடமானம் வைத்திருந்த ஆவணங்களை என் வசம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சாட்சி கூறினானர். பலமுறை பிரதிவாதி என்னிடம் இருந்த தாவா சொத்திற்கான அசல் ஆணவத்தை கேட்டும் நான் அவர் வசம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டேன் என்று சொன்னால் தவறு. அசல் வழக்கு எண்.24/2024 ல் அந்த வழக்கினுடைய ஒப்பந்த பத்திரத்தை வாசாஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதில் தாக்கல் செய்யப்பட்ட வாசாஆ.1 லும் முதல் 2 பக்கங்களில் உள்ள வரிகளின் அளவுகள் ஒரு மாதிரியாகவும் 3 முதல் 5 வரையிலான வரிகளின் அளவுகள் வேறுபட்டும் காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண்.24/2024 –ல் தாக்கல் செய்யப்பட்ட வாசாஆ.1 ஆவணம் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. 2021, 2022 ஆண்டிற்கான நான் வேறு ஏதாவது சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்று வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்க சான்றை இந்த வழக்கில தாக்கல் செய்ய முடியுமா என்றால் நான் ஆன்லைனில் தான் பார்த்தேன். நான் ஆன் லைனில் பார்க்க வேண்டுமென்றால் பதிவிறக்கம் செய்து தான் பார்க்க முடியும் என்றும் அதனை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியமா என்றால் பதிவிறக்கம் செய்து தாக்கல் செய்கிறேன்.

**(ஓம்./–) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**